# யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

## பரிசளிப்பு விழா – 2013

2014.07.13

# அதிபர் அறிக்கை

# Mission

The mission is to prepare the students to face the globalization and also, develop their talents to meet the demand of the modern society. The mission also envisages to develop the knowledge of information technology of the modern society and also produce responsible citizens who uphold high human values, which helps to raise the of the college.

# Vision

The vision is to produce students who achieve competency through systematic Educational Activities which help to prepare a disciplined, cultured society.

# Motto

**" Lighted to give light "**

மகுட வாசகம்

"ஒளிர்வதற்காய் ஒளியேற்றுக"

# யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
# பரிசளிப்பு விழா
# அதிபர் அறிக்கை ~ 2013

இன்று எமது பரிசளிப்பு நாளில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் மதிப்புக்கும் அன்புக்கு முரிய வட மாகாண கல்விப் பணிப்பாளர் திரு.ஆ.இராஜேந்திரன் அவர்களே,அவர் தம் துணைவியார் திருமதி.இ.சரோஜினிதேவி அவர்களே, மதிப்புக்குரிய வலயக் கல்விப் பணிப்பாளர் அவர் களே, மற்றும் வலயக் கல்வி உத்தியோகத்தர்களே, அயற் பாடசாலையின் அதிபர்களே, ஆசிரியர்களே மற்றும் ஓய்வு பெற்ற அதிபர்களே, ஆசிரியர்களே நலன் விரும்பிகளே ஊழியர் களே,எமது பாடசாலையின் ஆசிரியர்களே, ஊழியர்களே பழைய மாணவர்களே என தன்பின் மாணவச் செல்வங்களே அனைவருக்கும் எனது மதிய வணக்கம்.

எமது கல்லூரியின் 2013 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு நாளின் அறிக்கையை தங்கள் முன் சமர்ப்பிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய நன்நாளில் எமது குறுகிய கால அழைப்பை ஏற்று, பிரதம விருந்தினர் அவர்கள் தங்கள் சிரமத்தைப் பாராது, துணைவியார் சகிதம் வருகை தந்து, எமது மாணவிகளுக்கு பரிசில் வழங்க இருப்பதையிட்டு பேருவகை அடைகின்றோம்.

எமது மாகாணக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் ஆசிரியராகவும், அதிபராகவும், கோட்டக் கல்வி அதிகாரியாக வும், பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும், வலயக் கல்விப் பணிப் பாளராகவும் பல பதவிகளை வகித்து தற்போது மாகாணக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்ந்துள்ளார் என்பதில் நாம் பெருமிதம் அடைகின்றோம்.

**கல்லூரியின் தற்போதைய நிலை :**

2013 இல் மாணவர்கள் கல்வி அபிவிருத்தியிலும், இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் சிறப்பாக மிளிர்ந் துள்ளார்கள். இவ்வருடம் எமது கல்லூரி 145 அகவையைக் கடந்து, எழிலுறு நுழைவாயிலுடன் நிமிர்ந்து நிற்கின்றது. இடிபாடுகளுடன் காணப்பட்ட கட்டடங்கள், வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் அனுமதியுடன் அகற்றப்பட்டன. மாண வர்கள் பாதுகாப்பாகக் கற்றல், செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு இவை சாதகமாக அமைந்திருந்தன. இவ்வாறு கல்லூரியின் வளர்ச்சிக்குச் சேவை புரிந்த அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள் என்பதை இந் நேரத்தில் குறிப்பிடுகின்றேன்.

## ஆசிரிய வளம்

| வகை | எண்ணிக்கை |
|---|---|
| பயிற்றப்பட்ட ஆசிரியர் | 11 |
| பயிற்றப்படாத ஆசிரியர | 02 |
| பட்டதாரி ஆசிரியர் | 41 |
| நூலக ஆசிரியர் | 01 |
| தற்காலிக ஆசிரியர் | 02 |
| கல்வியல் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர் | 02 |
| பகுதி நேர ஆங்கில ஆசிரியர் | 02 |

இக் காலப் பகுதியில் எமது கல்லூரியிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களாக திரு.வ.விக்னே ஸ்வரன், திருமதி.வா.நாகநாதன், திருமதி.வ.லோகேஸ்வரன், செல்வி.பி.பாலச்சந்திரன், திருமதி.கி.யோகானந், திருமதி.சா.புலேந்

திரன,திருமதி.ச.யோகேந்திரன் ஆகியோரைக் குறிப்பிடலாம். அவர்களின் சேவையும் இப் பாடசாலைக்கு மிகவும் அளப்பரியதாகும்.

அதே நேரத்தில் இப்பாடசாலைக்குப் பின்வருவோர் இட மாற்றம் பெற்று வந்துள்ளார்கள். திரு.அ.யோகேந்திரன், திருமதி.அ.பாஸ்கரன், திருமதி.ப.அருள்மகேஸ்வரன், செல்வி. ப.சுரேந்திரநாதன், திருமதி.ச.பிறேமரஞ்சித், திருமதி.த.ஸ்ரீகோணே ஸ்வரன், திருமதி.சி.பிரபாகரன், திருமதி.ந.கிருஸ்ணபவான், செல்வி.தி.தர்மரட்ணம் , திரு.சி.உமாகாந்தன் (காவலாளி). அத்து டன் திருமதி.ரங்கநாயகி செல்வராஜா 25.04.2013 அன்று சேவை யிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். அவரின் சேவையும் பாடசாலைக்கு மகத்தானது. திரு.த.மணிவண்ணன் ( தோட்டத் தொழிலாளி) அவர்களும் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

மேலும் எமது ஆசிரிய குழாத்தில் உள்ள செல்வி. மே.திருநடராஜா மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் பணி யாற்றுகின்றார். திரு.சி.பாலமுருகன், திருமதி.ரே.ராமதாஸ் ஆகி யோர் யாழ் பல் கலைக்கழகத்தில் MEd பட்டப் படிப்பை மேற் கொள்கின்றார்கள். திருமதி.ம.பிரதாப் ஆசிரியர் பயிற்சிக் கலா சாலையில் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கின்றார்.

**மாணவர் வளம்**

| | |
|---|---|
| ஆரம்பப்பிரிவு | 317 |
| இடைநிலைப்பிரிவு | 472 |
| உயர்தரப் பிரிவு | 186 |

**முகாமைத்துவக் குழு :**

எமது கல்லூரியின் 2013 இல் திருமதி.கௌ.சேதுராஜா அதிபராகவும் திருமதி.ஈ.குட்டித்தம்பி பிரதி அதிபராகவும் கடமை யாற்ற திருமதி.க.கைலாசநாதன் உயர்தரப் பிரிவின் பகுதித் தலைவராகவும். திரு.சு.கிருஸ்ணராஜா, திருமதி.அ.இராஜகுமாரன்

ஆகிய இருவரும் இடைநிலைப்பிரிவின் பகுதித் தலைவர் களாகவும் திருமதி.சி.கமலசிங்கம் ஆரம்பப் பிரிவின் பகுதித் தலைவராகவும் செயற்பட்டனர். இக்குழுவினருடன் ஒழுக்காற்றுக் குழுவின் பொறுப்பாசிரியர் திருமதி.நா.ஸ்ரீரங்கநாதன் அவர்களும் சிரேஸ்ட ஆசிரியர்கள் திருமதி.க.துரைசிங்கம், செல்வி.ம.கணேஷ் ஆகியோரும் இணைந்து செயற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

எமது கல்லூரியின் ஏனைய ஆசிரியர்களும் முகாமைத்து வுக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதுடன் சிரேஸ்ட மாணவ தலைவிகளும் இணைந்து கல்லூரியின் ஒழுக்கம், கட்டுப்பாடு, சுத்தம், சுற்றுப்புறச்சூழல் போன்றவற்றைப் பேணுவதிலும் கவனம் செலுத்தி வருகின்றனர். மேலும் கல்விசாரா ஊழியர்களும் முகா மைத்துவத்திற்கும் ஏனைய செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் உதவி ஆசிரியர் களாகக் கடமை ஆற்றிய செல்வி.B.பிரமிளா, செல்வி.து.நர்மதா, செல்வி.R.துசா, செல்வி.சு.தேன்மொழி, செல்வி.S.தயாளினி, செல்வி.S.சிவபானுகா, திருமதி.S.சங்கீதா ஆகியோரது தன்னலமற்ற சேவைகளும் பாராட்டப்பட வேண்டியவையாகும்.

**கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள் :**

எமது கல்லூரியின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் வினைத்திறனுடன் எமது ஆசிரியர் குழாத்தினால் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. மேலும் விடுமுறைக் காலங்களில் கால அட்டவணைப்படி மேலதிக வகுப்புக்களை வைத்து ஆசிரியர்கள் அர்ப்பணிப்படன் சேவையாற்றியமை பாராட்டுதற்குரியதாகும். இவ் அர்ப்பணிப்பினால் க.பொ.த (சாதாரண)ப் பரீட்சையில் 8AB சித்திகளை 7 மாணவிகள் பெற்றனர். அத்துடன் தரம் 5 மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள் துறைசார்ந்த புலமை வாய்ந்த வளவாளர்களால் மேற்கொள்ளப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 9 மாணவிகள் சித்தியடைந்தமை எமது கல்லூரிச் சமூகத்துக்கு பெருமை தரும் விடயமாக உள்ளது. இக் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள் இன்று வரை தொடர்கின்றமை சிறப்புக்குரியது.

### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை – 2013

| தோற்றியோர் | சித்தியடைந்தோர் | 100 புள்ளிக்கு மேலெடுத்தோர் |
|---|---|---|
| 55 | 09 | 32 |

### க.பொ.த (சாதாரண) தரம் – 2013

| பாடம் | தோற்றி யோர் | சித்தி பெற்றோர் | சித்தி வீதம் |
|---|---|---|---|
| சைவநெறி | 50 | 50 | 100.00 |
| கிறிஸ்தவம் | 04 | 04 | 100.00 |
| தமிழ் மொழி | 54 | 47 | 87.00 |
| ஆங்கிலம் | 54 | 31 | 57.00 |
| கணிதம் | 54 | 37 | 68.00 |
| வரலாறு | 54 | 39 | 72.00 |
| விஞ்ஞானம் | 54 | 39 | 72.00 |
| வணிக. கணக்கீடும் | 34 | 26 | 76.00 |
| புவியியல் | 20 | 20 | 100.00 |
| சங்கீதம் | 11 | 11 | 100.00 |
| நடனம் | 13 | 12 | 92.00 |
| தமிழ் இலக்கிய நயம் | 10 | 10 | 100.00 |
| நாடகமும் அரங்கியலும் | 19 | 19 | 100.00 |
| தகவல் தொடர் .தொ. | 10 | 10 | 100.00 |
| மீன்பிடி. உணவுத் தொ. | 07 | 07 | 100.00 |
| மனைப்பொருளியல் | 13 | 11 | 84.00 |
| சுகா. உடற்கல்வியும் | 24 | 21 | 87.00 |

## க.பொ.த (உயர்) தரம் – 2013

| பாடம் | தோற்றி யோர் | சித்தி பெற்றோர் | சித்தி வீதம் |
|---|---|---|---|
| பௌதிகவியல் | 14 | 06 | 42.86 |
| இரசாயனவியல் | 14 | 09 | 64.28 |
| உயிரியல் | 10 | 09 | 90.00 |
| இணைந்த கணிதம் | 04 | 01 | 25.00 |
| பொருளியல் | 25 | 22 | 88.00 |
| புவியியல் | 06 | 05 | 83.30 |
| அளவையியலும் விஞ்ஞா. | 14 | 11 | 68.75 |
| மனைப்பொருளியல் | 02 | 02 | 100.00 |
| வணிகக்கல்வி | 14 | 13 | 92.85 |
| கணக்கியல் | 14 | 13 | 92.85 |
| இந்துநாகரீகம் | 11 | 10 | 90.90 |
| நடனம் | 07 | 07 | 100.00 |
| சங்கீதம் | 04 | 04 | 100.00 |
| நாடகமும் அரங்கியலும் | 03 | 03 | 100.00 |
| தமிழ் | 24 | 22 | 91.60 |
| பொது ஆங்கிலம் | 56 | 14 | 25.00 |
| பொது உளச்சார்பு | 56 | 23 | 41.07 |

**இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் :**

2013.02.02 கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நடைபெற்றது. உடற்கல்வி ஆசிரியர் திருமதி.அ.யோகீஸ்வரராஜா ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து திருமதி.அ.பாஸ்கரன் அவர்கள் உடற்கல்வி ஆசிரியராக கடமையாற்றி எமது கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்களின் ஒத்துழைப் புடன் இனிதே இப் போட்டி நடைபெற்றது. கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.S.நற்குணலிங்கம் அவர்கள் பிரதம

விருந்தினராகவும் அவர் தம் துணைவியார் அவர்கள் பரிசில் வழங்கி கௌரவித்தமையும் நினைவில் கொள்ளத்தக்கது.

திருமதி.அ.பாஸ்கரன் அவர்களின் முயற்சியினாலும் பெற்றோரின் ஒத்து ழைப்பினாலும் வலய, மாவட்டம், மாகாணம், தேசியம் வரை மாணவர்கள் போட்டிகளில் பங்குபற்றி சாதனை படைத்தனர். இவற்றோடு சதுரங்கப் போட்டியிலும் தேசிய மட்டம் வரை சென்றமைக்கு சதுரங்கப் பயிற்றுவிப்பாளர் திரு.T.இராஜசிங்கம் அவர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய சேவையைப் பாராட்டியே ஆக வேண்டும்.

மேலும் ஆங்கில தினப் போட்டிகளில் எமது மாணவிகள் கோட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றி பல இடங்களைப் பெற்று வலய மட்ட போட்டியிலும் பங்குபற்றினர்.

பெண் சாரணியம் எமது கல்லூரியின் சிறம்பம்சமாகும். எமது ஆசிரியர்களின் ஊக்குவிப்பினால் வெள்ளிக்கிழமை தோறும் சாரணிய உடையுடன் கல்லூரியில் உலாவருவது குறிப்பிடத் தக்கது.

கணித பாட ஆசிரியர்களும் தங்கள் செயற்பாடுகளால் மாணவர்களை உள் வாங்கி கணித புதிர் போட்டி, கணித உப கரணப் போட்டிகளில் பங்கு பற்றியுள்ளார்கள்.

## ஆசிரியர் ஊழியர் நலன்புரிச் சங்கம்

திருமதி.ச.மகாராஜா அவர்களைத் தலைவராகவும் திரு.அ. வினோதன் அவர்களை செயலாளராகவும், செல்வி.ச.சசிகலா அவர்களைப் பொருளாளராகவும் கொண்டு செயற்படுகின்ற ஆசிரியர் ஊழியர் நலன்புரிச் சங்கம் ஆசிரியர்களின் இன்ப துன்ப நிகழ்வுகளில் பங்குபற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

பாடசாலையின் அதிபர் திருமதி கௌ.சேதுராஜாவைத் தலைவராகவும் திருமதி உ..சிவபாலசேகரம் செயலாளராகவும் பொருளாளராக திரு சு.சிவலிங்கம் (ஆசிரியர்) அவர்களையும் கொண்டு, பாடசாலை அபிவிருத்திக்குழு இயங்கியது.இக்குழு மாணவர்களின் கற்றல் கற்பித்தல் நடடைிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுஅவற்றிற்குரிய கற்பித்தல் சாதனங்களைப் பெற்று மபணவர்களின் செயற்பாடு சிறப்பாக நடைபெற உந்துசக்தியாக அமைந்தது,

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம் :**

அதிபர் அவர்களை தலைவராகவும் திரு.சி.பரமேஸ்வரன் அவர்களை செயலாளராகவும் திரு.ச.கிருஸ்ணராஜா அவர்களை பொருளாளராகவும் கொண்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இயங்கி வருகின்றது. தொலைபேசிக் கட்டணம், மின் கட்டணம், அத்தியாவசியப் பராமரிப்பு வேலைகள் என்பவற்றையும் இச் சங்கம் நிறைவேற்றுகின்றது. மேலும் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவின் உபசரிப்புச் செலவுகளையும் ஏற்றுக் கொள் கின்றது. அத்துடன் தொழிலதிபர் திரு.ந.பாஸ்கரன் அவர்களும் அவுஸ்திரேலியா வாழ் திரு.S.சுரேந்திரன் அவர்களும் இச் சங்கத்தினூடாக மாணவர்களுக்கு உதவி வழங்கி வருகின்றனர்.

**பழைய மாணவர் சங்கம் :**

இச் சங்கம் எமது மாணவிகளின் கல்வி நலனில் அக் கறை காட்டி ஆசிரியர் பற்றாக்குறை உள்ளவிடத்து ஆசிரியர் களை உள்வாங்கி அவர்களுக்கான வேதனங்களை வழங்கி வருகின்றமையும் பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டி என்பவற்றுக்கும் எமது கல்லூரியின் முன்னாள் அதிபரின் ஞாப கார்த்தமாகவும் அமரர் பேராசிரியர் துரைராசா அவர்களது ஞாப கார்த்தமாகவும் பரிசில்களை வழங்கி வருகின்றமை குறிப் பிடத்தக்கது. மேலும் கல்லூரியிலிருந்து மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுகின்ற மாணவர்களுக்கான போக்குவரத்து நிதியினை வழங்கி வருவது மகிழ்ச்சிக்குரிய தாகும்.

மேலும் எமது பாடசாலை பழைய மாணவி திருமதி. ஜெ.சாரதா அவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மாணவிக்கு தனது தந்தையின் பெயரில் பரிசில்கள் வழங்கி வருவதும் எமது கல்லூரியின் பழைய மாணவர்களான ஆசிரியர்களும் தமது தாய் தந்தையின்

நினைவாக மாணவிகளுக்கு பரிசில்களை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

**ஏனைய உதவிகள் :**

எமது அயலிலுள்ள வர்த்தக நிறுவனங்கள் எமது கல்லூரியின் வருடாந்த நிகழ்வுகளுக்கு அன்பளிப்புக்களை வழங்கி வருகின்றமை எமது கல்லூரிச் சமூகத்திற்கு மகிழ்வைத் தருகின்றது. அத்துடன் சமூகச்சுடர் திரு.ந.பாஸ்கரன் அவர்கள் 2013 இல் கல்லூரியின் பரிசளிப்பு விழாவிற்கு பிரதம அதிதியாக வருகை தந்து சிறப்பித்ததோடு மட்டுமல்லாமல் மாணவிகளின் கல்வி அபிவிருத்திக்காக நன்கொடைப் பணமாக ரூபா 100000.00 ஐ வங்கியில் வைப்பிலிட்டமை அவர்களின் சமூச சேவையை மேலும் பிரகாசிக்கச் செய்கின்றது. அத்துடன் பிரதான மண்டபத்திற்கு உடனடியாகவே மின்விசிறியை அன்பளிப்பாக வழங்கியதோடு அதைப் பொருத்துவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டமை மகிழ்வைத் தருகின்றது.

அத்துடன் கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி. இ.செல்வராசா எமது பாடசாலை அலுவலகத்திற்கு உருக்கு அலுமாரி ஒன்றை அன்பளிப்புச் செய்தமை நன்றிக்குரியதாகும்.

எமது கல்லூரியின் பழைய மாணவியும் முன்னை நாள் கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆசிரியரும் தற்போது கனடாவில் வசிக்கும் திருமதி.இ.ராதகிருஸ்ணன் அவர்கள் உடற்பயிற்சிக்கான ஆடைகளுக்காக பணமாக ரூபா 50000.00 தந்துதவியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மற்றும் பழைய மாணவர் சங்கத்தினால் பாடசாலைப் பயன்பாட்டிற்காக Motor ஒன்றினை அன்பளிப்புச் செய்தமையையும் குறிப்பிடத்தக்கது.

## நன்றியுரை

இன்று இப் பரிசளிப்பு விழாவை அலங்கரித்துக் கொண்டிருக்கும், எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய பிரதம விருந்தினர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.ஆ.இராஜேந்திரன் அவர்களுக்கும், பரிசில்களை வழங்கி எமது மாணவிகளை கௌரவிக்கவிருக்கும் அவர்தம் பாரியார் திருமதி.ச.இராஜேந்திரன் அவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகள் உரித்தாகுக. இன்றைய பரிசு நாள் சிறப்புற நடைபெறுவதற்கு சகலவழிகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். பாடசாலை சிறப்புற இயங்குவதற்கு உதவி புரிந்த பிரதி அதிபர், உதவி அதிபர், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகள்.

மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி உதவி புரிந்த பாடசாலையின் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், நலன்விரும்பிகள், எமது பாடசாலையின் அயலில் அமைந்துள்ள நிறுவன முகாமையாளர்கள், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவிகளுக்கான வருடாந்தம் பரிசில்களை வழங்கும் மதுஷன் பல்பொருள் வாணிப நிலைய முகாமையாளருக்கும் எமக்கு அன்பளிப்புக்களை வழங்கிய அனைத்து நல்நெஞ்சங்களுக்கும் எமது நன்றிகள். மேலும் மாணவிகளுக்கு ஞாபகார்த்த பரிசுகளை வழங்கும் பழைய மாணவிகள், எமது பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகள்.

பல்கலைக்கழக அனுமதி பெற்ற அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவிக்கு வருடந்தோறும் பரிசு வழங்கும் தொழிலதிபர் திரு.ந.பாஸ்கரன் அவர்களுக்கும் உளமார்ந்த நன்றிகள்.

மற்றும் இந்நிகழ்வுக்கான அழைப்பிதழ், Video ஆகியவற்றை இலவசமாக செய்து தந்த ஒளியருவி புகைப்பட நிறுவன முகாமையாள் திரு.A.பிரபாகரன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எல்லாவிதத்திலும் இவ்விழா சிறப்புற நடைபெற உதவிபுரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் மீண்டும் ஒருமுறை நன்றியைக் கூறுகின்றேன்.

Mrs.N.Chandrasegaram
Principal
Uduppiddy Girls' Coll
Valvettithurai



## 2013 ஆம் ஆண்டிற்கான பரிசில் பெறுவோர் விபரம்

### தரம் 1 ~ பொதுத்திறமை

01. ஆராதனா மனோகரன்
02. செந்துஜி செல்வானந்தம்
03. ஹாஹினி யோகேந்திரன்
04. சாகித்யா ரூவேந்திரா
05. நதுஷா பிரதாப்
06. நிரஞ்சனா புஸ்பராசா
07. அபிஷேகா சந்திரமோகன்
08. சுலக்ஷி கிருஸ்ணலிங்கம்

### தரம் 2 ~ பொதுத்திறமை

01. கஜேனா பாலமுரளி
02. சனாதனி சேதுபதி
03. ஜெசிந்தா ஜெகதீஸ்
04. சுபிட்ஷிகா சுபாஸ்கரன்
05. தினேஷா ஜெயானந்தன்
06. அஸ்பிகா பிரதீபன்
07. துஷானி புவனேந்திரன்
08. அபிஸ்கா பிரதீபன்

### தரம் 3 ~ பொதுத்திறமை

01. நம்ரிதா உதயரூபன்
02. ரோஷினி ரக்ஷயா ஜோன்சன்
03. கிஷானி முருகவேல்
04. நிதுஷிகா கலைச்செல்வம்
05. ஹபிஷா அமரசிங்கம்
06. சபீனா விமலேந்திரன்
07. லவீனா ஜெயக்குமார்
08. சங்கீர்த்தனா ரமணன்

### தரம் 4

01. யுவர்ணா விஷ்ணுவர்த்தன் - கணிதம், சமயம்,தமிழ்,சுற்றாடல்
02. அஸ்வினி ரஞ்சன் - ஆங்கிலம்
03. சுயேனிகா சிறிதரன் - கிறிஸ்தவம்

### தரம் 5

01. மிதுஷா ஸ்ரீபாலகிருஸ்ணன் - சமயம், சுற்றாடல்
02. பிரணவி விக்கினேஸ்வரராசா ஆங்கிலம்
03. சுபானி புவனேந்திரன் - கணிதம்
04. நிந்துஜா தர்மசீலன் - தமிழ்
05. ஜோய்சிகா பராக்கிரபாகு - கிறிஸ்தவம்

# பரிசில் பெறுவோர் விபரம்

**தரம் 6**

| மாணவி பெயர் | பாடம் |
|---|---|
| 01. யோ.கஜனிகா | ஆங்கிலம்,கணிதம்,விஞ்ஞானம், வரலாறு,புவியியல்,குடியுரிமைக் கல்வியும் வாழ்க்கைத் தேர்ச்சி யும், சங்கீதம்,பொதுத்திறமை. |
| 02. ச.தனுஷகா | தமிழ், சுகாதாரம்,விஞ்ஞானம், கணிதம் (English medium) |
| 03. சா.பமீலா | சைவநெறி, கணிதம் |
| 04. லூ.அலெக்சனா | றோமன் கத்தோலிக்கம் |
| 05. மு.கஜேந்தினி | குடியுரிமைக்கல்வியும்வாழ்க் கைத் தேர்ச்சியும் |
| 06. சி.யதுஷிகா | கணிதம் |
| 07. சி.திவ்வியா | நடனம் |
| 08. ந.டிலக்சி | சித்திரம் |
| 09. த.துவாராகா | செயன்முறைத் தொழில்நுட்பம் |

**தரம் 7**

| | |
|---|---|
| 01. க.அபிஷா | சைவசமயம்,தமிழ்,கணிதம், விஞ்ஞானம்,புவியியல்,செயன் முறைத் தொழில்நுட்பம், சுகாதாரம்,பொதுத்திறமை. |
| 02. சா.ஆர்த்திகா | கணிதம்(Eng)வரலாறு,குடியுரி மைக்கல்வியும் வாழ்க்கைத் தேர்ச்சியும் |
| 03. சோ.ஜெயகௌரி | ஆங்கிலம்,விஞ்ஞானம் (Eng) |
| 04. செ.அபிஷா | கிறிஸ்தவம் |
| 05. தி.மதுஷிகா | சங்கீதம் |
| 06. கி.தனபைரவி | நடனம் |
| 07. ர.சாருயா | சித்திரம் |

**தரம் 8**

| | | |
|---|---|---|
| 01. | சி.சுமிததா | சைவசமயம்,ஆங்கிலம், கணிதம்(Eng) புவியியல், சித்திரம்,பொதுத்திறமை |
| 02. | ஸ்ரீ.யஸ்மிகா | விஞ்ஞானம், செயன்முறைத் தொழில் நுட்பம், சுகாதாரம், வரலாறு. |
| 03. | ஸ்ரீ.தானுஜா | தமிழ் |
| 04. | யோ.மதுரா | கணிதம் |
| 05. | பி.மதிவதனி | சங்கீதம், விஞ்ஞானம் (Eng) |
| 06. | யோ.பிருந்தா | குடியுரிமைக்கல்வியும் வாழ்க்கைத்தேர். |
| 07. | சி.உமையாள் | நடனம் |
| 08. | அ.நிந்துசா | நடனம் |

**தரம் 9**

| | | |
|---|---|---|
| 01. | ச.மதுசுஜா | சைவசமயம்,ஆங்கிலம்,கணிதம், வரலாறு, சுகாதாரம்,பொதுத்திறமை. |
| 02. | இ.சைந்தவி | தமிழ்,வரலாறு,நடனம்,சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 03. | தே.நிவேதினி | விஞ்ஞானம்,புவியியல்,குடியுரிமைக் கல்வியும் வாழ்க்கைத்தேர்ச்சியும்,P TS |
| 04. | ப.சலோமிகா | கிறிஸ்தவம் |
| 05. | றே.நிருஜனா | றோமன் கத்தோலிக்கம் |
| 06. | கு.டர்மி | சங்கீதம் |
| 07. | ச.நதீஷா | சித்திரம் |

**தரம் 10**

| | | |
|---|---|---|
| 01. | கி.வோஜிகா | சைவசமயம், தமிழ்,விஞ்ஞானம் |
| 02. | கி.நிலுக்ஷி | புவியியல்,இலக்கியநயம்,கத்தோலிக்கம் |
| 03. | செ.வினோதினி | வரலாறு, ICT |
| 04. | பா.பவித்திரா | கணிதம், நடனம் |
| 05. | ப.சௌந்தர்யா | ஆங்கிலம் |

| | | |
|---|---|---|
| 06. | கி.பவநிதா | வர்த்தகம் |
| 07. | செ.நிலாளினி | சங்கீதம் |
| 08. | சு.நிவேதா | நாடகமும் அரங்கியலும் |
| 09. | ம.மதிவதனி | மனையியல் |
| 10. | சு.கஜந்தி | சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 11. | இ.கஜிந்தினி | கிறிஸ்தவம் |

## க.பொ.த(சாதாரண) தரம்

| | | |
|---|---|---|
| 01. | மாதுளா மனோகரன் | 8AB |
| 02. | தர்சினி நவரட்ணம் | 8AB |
| 03. | யாமினி கருணாகரன் | 8AB |
| 04. | பாரதி பாலசுப்பிரமணியம் | 8AB |
| 05. | நவஜோதி நவேந்திரன் | 8AB |
| 06. | நந்தினி நல்லநாதன் | 8AC |
| 07. | பிரியதர்சினி பெரியதம்பி | 8AS |
| 08. | நிவேதினி தவநேசன் | 7ABC |
| 09. | கிருஷிகா யோகநாதன் | 5A 3B C |
| 10. | திவ்வியா இராயேந்திரா | 4A 2B 3C |
| 11. | லவ்ஷிகா பராக்கிரமபாகு | 4A 4B C |
| 12. | சாமந்தி முருகதாஸ் | 4A 3B 2C |
| 13. | விஜியா சீவரத்தினம் | 4A 3B C |

## க.பொ.த(உயர்) தரம்

| | |
|---|---|
| 2014 Bio | துவாரகா அழகராசா |
| 2014 Maths | சர்மிளா விக்னேஸ்வரன் |
| 2014 Commerce | சுவர்ணா ஸ்ரீமுருகமூர்த்தி |
| 2014 Arts | தமிழ்நிலா இந்திரதாஸ் |
| 2015 Bio | பிரியங்கா கந்தசாமி |
| 2015 Maths | கஜானி கிருஸ்ணகுமார் |
| 2015 Commerce | தர்சினி நகுலேஸ்வரன் |
| 2015 Arts | தர்ஷலா குணசேகரம் |

# இணைப்பாட விதான செயற்பாடுகள்

## தமிழ்த் தினப்போட்டி – 2013

| தலைப்பு | பிரிவு | பெயர் | நிலை | |
|---|---|---|---|---|
| | | | வலயம் | மாவட்டம் |
| தனிநடனம் | II | கி.தனபைரவி | 1 | 2 |
| தனிநடனம் | III | ஆ.யவனப்பிரியா | 2 | - |
| தனிநடனம் | IV | சா.நோமிகா | 3 | - |
| நாட்டியநாடகம் | | | 3 | - |

## கல்வி அமைச்சினால் நடாத்துப்பட்ட நடனப்போட்டி – 2013

| பெயர் | நிகழ்வு | நிலை | | |
|---|---|---|---|---|
| | | வலய | மாகாணம் | தேசியம் |
| கி.தனவைபரவி | தனிநடனம் | 1 | 1 | 2 |
| | குழுநடனம் | 1 | | |
| | சுளகுநடனம் | 2 | | |
| ஸ்ரீ.அபிநயா | பதம் | 1 | | |

## இரண்டாம் மொழிப் போட்டி (வலய மட்டம்) – 2013

| பெயர் | தரம் | நிகழ்வு | நிலை |
|---|---|---|---|
| நி.கடல்நிலா | 8 | வாசிப்பு, பேச்சு | 1 |

## விஞ்ஞான வினாடி வினாப்போட்டி (வலய மட்டம்) – 2013

| தரம் | பெயர் | நிலை |
|---|---|---|
| 6 | கஜனிகா யோகநாதன் | 1 |
| 6 | சானுஜா இரவீந்திரன் | 3 |
| 7 | அபிஷா கந்தமூர்த்தி | 1 |

## சமூக விஞ்ஞானப் போட்டி – 2013

| தரம் | பெயர் | நிலை | |
|---|---|---|---|
| | | வலயம் | மாவட்டம் |
| 6 | R.சானுஜா | 1 | |
| 7 | க.அபிஷா | 1 | 1 |
| 9 | ச.மதுஷிகா | 1 | |
| 11 | N.நந்தினி | 1 | |

## ICT போட்டி ( வலய மட்டம்) – 2013

| தரம் | பெயர் | நிகழ்வு | நிலை |
|---|---|---|---|
| 8 | வி.ரஜனா | Quiz | 3 |
| 9 | ச.மதுஷிகா | Quiz | 2 |
| 10 | | Flash Animation | 3 |
| A/L | | இணையத்தள வடிவமைப்பு | 1 |

## இந்து சமய அறிவுப் போட்டி (மாவட்ட மட்டம்) – 2013

| பெயர் | பிரிவு | நிலை |
|---|---|---|
| இ.சைந்தவி | 9 | 2 |
| கி.பவநிதா | 10 | 1 |

## விளையாட்டு – மெய்வல்லுனர்

| பிரிவு | பெயர் | நிகழ்ச்சி | நிலை | |
|---|---|---|---|---|
| | | | வலயம் | மாகாணம் |
| U13 | சா.ஆர்த்திகா | நீளம் பாய்தல் | 1 | |
| U13 | ப.நிதர்சனா | உயரம்பாய்தல் | 1 | |
| U15 | அ.ஜெபிகா | 400m | 1 | |
| U15 | தி.ஜொய்லக்சிகா | 100m | 1 | |
| U17 | சி.ஆரணி | 100m | 1 | 2 |
| | | 200m | 1 | 3 |
| | | நீளம்பாய்தல் | 1 | 1 |
| U21 | சி.கிருசாந்தி | 100m | 1 | |
| U21 | கு.அபர்ணா | நீளம்பாய்தல் | 1 | |
| U21 | ம.றம்மியா | முப்பாய்ச்சல் | 1 | |
| U21 | இ.மைதிலி | தட்டு | 1 | |
| | | உடற்பயிற்சி | 1 | |
| U15 | | 4 x 100m | 1 | 1 |
| U17 | | 4 x 100m | 1 | |
| U19 | | 4 x 100m | 1 | |
| U17 | | 4 x 400m | 1 | |

## உள்ளக விளையாட்டுப் போட்டி

| பிரிவு | நிகழ்ச்சி | நிலை | |
|---|---|---|---|
| | | வலயம் | மாகாணம் |
| U 15 | சதுரங்கம் | 1 | 1 |
| U19 | பூப்பந்தாட்டம் | 3 | |

## சிறப்புப் பரிசில் பெறுவோர் – 2013

## தரம் 5 புலமைப் பரிசில் பெறுவோர் – 2013

| பெயர்கள் | புள்ளிகள் | ஞாபகார்த்தம் | பரிசு வழங்குபவர் |
|---|---|---|---|
| 01.வி.பிரணவி | 184 | திரு.திருமதி.மயில்வாகனம் | திருமதி.ர.சாரதா |
| 02.ஸ்ரீ.மிதுஷா | 181 | திரு.திருமதி.மயில்வாகனம் | திருமதி.ர.சாரதா |
| 03.சி.நிரோஷிகா | 173 | அருட்திரு.E.D.இராசரத்தினம் | திருமதி.L.N.ஜோசப் |
| 04.வ.கேதாரணி | 170 | திரு.திருமதி.விசாகப்பெருமாள் | திருமதி.அ.இராஜகுமாரன் |
| 05.சே.சதுர்ஸ்ரிகா | 170 | திரு.திருமதி.மகாலிங்கம் | திருமதி.க.துரைசிங்கம் |
| 06.த.நிந்துஜா | 164 | திரு.திருமதி.கார்த்திகேசு | திருமதி.கு.ஈஸ்வரி |
| 07.ஸ்ரீ.தர்ஷிகா | 159 | திரு.திருமதி.தம்பையா | திருமதி.ப.குழந்தைவேல் |
| 08.பு.சுபானி | 159 | திருமதி.த.சிவகுருநாதன் | திருமதி.அ.ஜெகதீஸ்வரன் |
| 09.செ.சரண்யா | 157 | திருமதி.இ.பற்குணேஸ்வரி | திருமதி.த.ஜெயக்குமார் |

இவர்களுக்கான பரிசில்கள் மதுஷன் ஸ்தாபனத்தின -ராலும் வழங்கப்படுகின்றது.

## க.பொ.த(சாதாரண) தரம் பரிசில் பெறுவோர் – 2013

| பெயர்கள் | பெறுபேறு | ஞாபகார்த்தம் | பரிசுவழங்குபவர் |
|---|---|---|---|
| 01. ம.மாதுளா | 8A B | செல்வி.E.K.மதியாபரணம் | பழைய மாணவர் சங்கம் |
| 02. ந.தர்சின | 8A B | | |
| 03. க.ஜாமினி | 8A B | | |
| 04. பா.பாரதி | 8A B | | |
| 05. ந.நவஜ்ஜோதி | 8A B | | |
| 06. ந.நந்தினி | 8A C | | |
| 07. பெ.பிரியங்கா | 8A S | | |
| 08. த.நிவேதினி | 7A B C | | |
| 09. யோ.கிருஷிகா | 5A 3B C | | |


## பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் – 2013

| பெயர் | துறை | ஞாபகார்த்தம் | பரிசு வழங்குபவர் |
|---|---|---|---|
| 01. ஸ்ரீ.பாமிலா | முகாமைத்துவம் | செல்வி.R.J.Mann | ப.மா.சங்கம் |
| 02. சி.பிரீதா | முகாமைத்துவம | செல்வி.R.J.Mann | ப.மா.சங்கம் |
| 03. ம.காயத்ரி | உயிரியல் | செல்வி.R.J.Mann | ப.மா.சங்கம் |
| 04. கு.சுகன்யா | பௌதீகவிஞ். | Pro.அ.துரைராசா | ப.மா.சங்கம் |
| 05. ப.பகீரதி | கலை | திருமதி.இந்திராணி | தொழிலதிபர் |
| 06. து.நித்திலா | கலை | புலமைப்பரிசில் நிதியம் | ந.பாஸ்கரன் |
| 07. தெ.வானுஜா | நுண்கலை | ------ | ப.மா.சங்கம் |
| 08. க.வினோதா | நுண்கலை | ------ | ப.மா.சங்கம் |
| 09. வை.பிரசாந்தி | நுண்கலை | ------ | ப.மா.சங்கம் |

**பாடசாலையின் 2013 ஆம் ஆண்டிற்கான சிறந்த மாணவி**

செல்வி.சுவர்ணா ஸ்ரீமுருகமூர்த்தி

செல்வி.லீ.வன்னியசிங்கம் ஞாபகார்த்தமாக பழைய மாணவர் சங்கத்தால் வழங்கப்படுகின்றது.



**கல்லூரிக்கீதம்**

இராகம்: சிந்து பைரவி
தாளம் : ஆதி
இயற்றியவர் : பொலிகண்டி நமசிவாயகம்பிள்ளை

# பல்லவி

எங்களது கல்லூரி வாழ்க, உடுப்பிட்டி
பெண்களது கல்லூரி வாழ்க, வாழ்க.
எங்களது கல்லூரி வாழ்க

# சரணம்

சீலம் செழிக்கும் உயர் தெய்வ சிந்தனையோடு
ஞாலம் புகழ் கற்பு நாற்குண நலங்களும்
காலம் கடந்து வளர் கலைகளும் பயிலவே
கருணையே அவதாரமாய் வந்த கடவுளே
எங்களது கல்லூரி வாழ்க

நல்லார் இணக்கமொடு நற்போத ஞானமும்
சொல்லிலே வாய்மையும் தூய்மை பொலி சாந்தமும்
எல்லா அறங்களிலும் ஏற்றமும் வளரவே
இறைவனின் திருநாமம் இதயத்தில் மிளிரவே
எங்களது கல்லூரி வாழ்க

ஆனந்த மயமான அன்பு நிறை சூழலில்
அகில குலசிறு மணிகள் அனைவோரும் இசைவுகொள
எளிமைபுணர் இளமை செறிகலைகள் அழகுவிரி
ஒளியெங்கணும் காண ஒளியையே ஈகின்ற
எங்களது கல்லூரி வாழ்க